## நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோட்டில்

# மெட்ரோ நிலையம் அமைக்க 17,495 சதுர அடி நிலம்

## தனியார் பள்ளி வழங்கியது

சென்னை, பிப். 29– நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோட்டில் மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்க 17,495 சதுர அடி நிலத்தை தனியார் பள்ளி வழங்கி உள்ளது.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப் பட்டது. முதல் கட்டமாக வண்ணாரப்பேட்டை– விமான நிலையம் வரை மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை நடந்து வருகிறது.

2–வது கட்டமாக மாதவரம்–சிறுசேரிக்கு மெட்ரோ ரெயில் வழித்தடம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

118 கி.மீட்டர் தூரத்துக்கு வழித்தடம் அமைக்கப்பட்டு 128 ரெயில் நிலையங்களுடன் உருவாக்கப்படுகிறது.

### 17,495 சதுரடி அடி

2–வது கட்ட மெட்ரோ ரெயில் நிலைய வழித்தடம், ரெயில் நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் நுங்கம்பாக்கத்தில் ஸ்டெர்லிங் சாலையில் மெட்ரோ ரெயில் நிலையம் அமைப்பதற்காக அங்குள்ள குட்ஷெப்பர்டு தனியார் பள்ளி 17,495 சதுர அடி நிலத்தை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு வழங்கி உள்ளது. இதற்கான உரிய இழப்பீட்டு தொகையை மெட்ரோ ரெயில் நிறுவனம் காசோலையாக வழங்கி உள்ளது.

மேலும் மெட்ரோ ரெயில் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.